**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.**

திரு.பொன்வேந்தன், பி.டெக், எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திரு. சிவகுமார் | அசல் வழக்கு எண். | 47/2020 |
| த/பெ. | - | வேதாச்சலம் | பி.சா. | 1 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

03.11.2025.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. தாவா சொத்தின் சர்வே எண்.544/13 என்றால் சரிதான். தாவா சொத்து அரசு ஆவணங்களில் பொது சந்து என்று உள்ளதாக நான் சொல்லியுள்ள நிலையில் அதற்கு ஆதரவாக வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். தாவா சொத்து வாதிக்கு மட்டுமே பாத்தியம் என்பதை நிரூபணம் செய்ய வாதி அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 2 மற்றும் 3 ம் பிரதிவாதிகள் செய்த தவறால் தான் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு தள்ளப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை யார் யாரெல்லாம் பயன்படுத்தி வருகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பொது சந்தாக உள்ளதால் பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்தி வருகிறார்கள். யாரெல்லாம் குறிப்பிட்டு பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் நானும் என் பெரியம்மா வைஜெயந்தி மட்டுமே பயன்படுத்தி வருகிறோம். என்னுடைய வீட்டு சர்வே எண் என்னவென்றால் எனக்கு தெரியாது.

2. தாவா சொத்தின் ரீ. சர்வே எண்ணான 544/13 ன் பழைய சர்வே எண். 153/23, நத்தம் சர்வே எண்.582 என்றால் எனக்கு தெரியாது. 05.09.2019 ம் தேதியில் வாதியின் மீது 3 ம் பிரதிவாதியிடம் புகார் கொடுத்தாக பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ள நிலையில் மேற்படி புகாரை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 3 ம் பிரதிவாதி வாதிக்கு எதிராக உத்தரவு பிறப்பித்துள்ளதாக என் பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ள நிலையில் மேற்படி உத்தரவு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 3 ம் பிரதிவாதி என்ன

உத்தரவு பிறப்பித்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் ஆகியோர் கிராம பொதுமக்களை விசாரித்ததாக என் பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ள நிலையில் யாரையெல்லாம் விசாரணை செய்தனர் என்றால் என் மாமா பாலா, என் பெரியம்மா வைஜெயந்தி, பானு, சேகர், குமாரசாமி, இராஜேந்திரன். மேற்படி நபர்களின் பெயர்களை என் பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் ஆகியோர் கிராம பொதுமக்களை விசாரித்தற்கான அறிக்கையை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, விசாரணை செய்தது மட்டும் தான் தெரியும். வாதியை விசாரித்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் துறையினர் விசாரணை செய்த பின்னர் தான் வழக்கு சொத்தானது பொது சந்து என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அதற்கு முன்பே பொதுமக்கள் பயன்படுத்தி வந்தனர். என் பிரமாண பத்திரிக்கையில் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் துறையினர் விசாரணை செய்த பின்னர் தான் வழக்கு சொத்தானது பொது சந்து என்று சொல்லப்பட்டடுள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் அறிக்கை கொடுத்தாக சொல்லியுள்ளேன். அந்த அறிக்கையை கிராம நிர்வாக அலுவலர் எனக்கு படித்து காண்பித்தாரா என்றால் படித்து காண்பித்தார். அந்த அறிக்கையின் நகல் எனக்கு கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோர் எவ்வித அதிகாரமும் இல்லாமல் வழக்கு சொத்தை பொது சந்து என்று அறிக்கை கொடுத்தது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல.

3. 20.01.2020 ம் தேதியில் வழக்கு சொத்திலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு 3 ம் பிரதிவாதி 4 ம் பிரதிவாதிக்கு உத்தரவிட்டுள்ளதாக என் பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ளநிலையில் மேற்படி உத்தரவு நகலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் எந்த உத்தரவும் 3 ம் பிரதிவாதி பிறப்பிக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் 4 ம் பிரதிவாதி என்ன நடவடிக்கை எடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 11.09.2020 ம் தேதியில் 3 ம் பிரதிவாதி வானூர் காவல்நிலையத்தாருக்கு வழக்கு சொத்திலுள்ள ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு அறிவிப்பு கொடுத்தாக சொல்லியுள்ள நிலையில் மேற்படி அறிவிப்பின் நகலை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. என்னுடைய வீடு எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் 544/8 மற்றும் 544/12 ல் உள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.1 பத்திரத்தில் சர்வே எண்.544/12 உள்ளதா என்றால் இரண்டும் ஒரே சர்வே எண் தான். பி.சா.ஆ.1 ஆவணம் வழக்கு சொத்திற்கு சம்மந்தமில்லாத ஆவணம் என்றால் சரியல்ல. சிங்கார முதலியார் குமாரர் சுப்புமுதலியார் என்பவர் ஆறுமுகம் முதலியார் என்பவருக்கு எழுதி கொடுத்த பத்திரம் என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் எனது தகப்பனார் வேதாசலம் பெயர் இல்லை என்றால் சரிதான். எதற்காக பி.சா.ஆ.1 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சந்து அதில் குறிப்பிடப்பட்டுள்ளது அதனால் தாக்கல் செய்துள்ளேன். பி.சா.ஆ.1 ஆவணம் எனக்கு உரிமையானது இல்லை என்றும் மற்றவருடைய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து பரிகாரம் கோர எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 ஆவணத்தின் சொத்து விவரத்தில் "நம் வகையறா பொது சந்து என்பது அடித்து திருத்தப்பட்டு பொது சந்தின் மேல்புறம் கொமரு முதலி அய்யா முதலி வகை" என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பின்னிட்டு வா.சா.ஆ.14 ஆவணத்தின் படி சந்தை அய்யாமுதலி மகன் தண்டபாணி என்பவரிடமிருந்து வாதியின் அண்ணன் டி.சிவராஜ் என்பவர் கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல.

5. சர்வே எண்.544/12 ல் உள்ள 2 சி புளியமரத்தை நான் பயன்படுத்தி வருவதாக சொல்லியுள்ள நிலையில் அதற்கான பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.544/8 மற்றும் 544/12 ன் வருவாய் ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.2 பட்டாவானது அனுபவத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். வாதியின் தந்தை பெயர் திருநாவுகரசு முதலியார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி வாதியின் தகப்பனார் மற்றும் அவருடைய இரண்டு சகோதரர்களான ராமலிங்கம் மற்றும் சகாதேவன் ஆகியோர்கள் 1964 ம் ஆண்டு தங்களுக்கு பாகபிரிவினை செய்து கொண்டனர் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் வழக்கு சொத்தானது சி அட்டவணை சொத்தாக வாதியின் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் வாதி கடந்த 25 வருடங்களான கம்பி வேலி போட்டு அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். வாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்ட வழக்கு சொத்தை வருவாய் துறையினர் பொது சந்து என்று திருத்தம் செய்ததால் தான் வாதி

இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சந்ததானது வடக்கு மேற்காக உள்ளது என்றால் சரிதான். தாவா சந்திற்கு வடக்கே மேட்டு மாரியம்மன் கோவில் தெரு உள்ளது என்றால் சரிதான். தெற்கே சோமசுந்தரமுதலியார் நஞ்சை உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கிழக்கே வாதிக்கு உரிமையும் அனுபவமுமான சர்வே எண்.544/14, 544/15, 544/16, 544/17, 544/18 உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு மேற்கில் குணசேகரன் வீட்டு மனை உள்ளது என்றால் சரிதான்.

6. சர்வே எண்.544/4 ல் யாருடைய வீட்டுமனை உள்ளது என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண்.544/4 என்பது எங்கள் வீட்டுற்கு செல்வதற்காக விடப்பட்ட பொது வழி என்றால் சரிதான். சர்வே எண். 544/4 மற்றும் 544/7 ஆகியவை தான் நாங்கள் செல்வதற்கான பொது வழி என்றால் அந்த வழியையும் பயன்படுத்தி வருகிறோம், வீட்டிற்கு பின்னால் தோட்டத்திற்கு செல்வதற்கு வழக்கு சொத்தை பயன்படுத்தி வருகிறோம். தாவா சொத்திற்கு மேற்கு, கிழக்கு மற்றும் வடக்கு பகுதிகளில் மக்கள் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். மேட்டு மாரியம்மன் கோவில் தெரு கிழக்கு மேற்காக செல்கிறது என்றால் சரிதான். அந்த மேட்டு மாரியம்மன் கோவில் தெரு தான் பொது மக்கள் செல்வதற்கான வழி என்றும் வாதியின் வாசபடி அருகே உள்ள வழக்கு சொத்தானது பொது வழியில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தானது வடக்கு தெற்காக தென்திசை நோக்கி சர்வே எண்.544/12 வரை தான் செல்கிறது என்றால் சரிதான், அதை தாண்டி சோமசுந்தரம் என்பவரின் கழனிவேலி உள்ளது. வழக்கு சொத்தில் செல்வதற்கு உரிமை கேட்டு பொது மக்கள் யாரும் வருவாய் துறையினரிடம் மனு கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

7. வழக்கு சொத்தை சுற்றி வாதிக்கு பாத்தியப்பட்டசர்வே எண்.544/14, 544/15, 544/16, 544/17, 544/18 உள்ளது என்றால் அவர்களுடைய அனுபவத்தில் உள்ளது. வாதிக்கு தனிப்பட்ட முறையில் கிரைய பத்திரத்தின் அடிப்படையில் பாத்தியப்பட்ட வழக்கு சொத்தானது வாதி வகையறா மட்டுமே பயன்படுத்த கூடியது என்றால் சரியல்ல. வாதிக்கு பாத்தியப்பட்ட வழக்கு சொத்தை யாரும் இடையூறு செய்ய கூடாது என்றால் சரியல்ல. எந்த வித ஆவணமும் இல்லாமல் வருவாய் துறையினர் தாவா சொத்தை பொறுத்து திருத்தம் செய்ததாக நான் சொல்லியுள்ள நிலையில் அது தவறு

என்றும் வழக்கு சொத்து பொதுவான சந்து என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. வாதி கோரியவாறு வழக்கு அனுமதிக்கதக்கது என்றால் சரியல்ல.

Taken down by me in the presence of the withess read over to the witness, and admitted by him/her to be correct.

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2025.11.03 17:57:44 +0530

District Munsif

Vanur.